2 தன்னிலை விளக்கம்.

உறுப்பினருக்கு ஒதுக்கப்பெற்ற வீட்டில் பிறர் தங்கி இருப்பது குறித்து.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் 184-வது விதியின் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்னையை தலைவரிடம் தந்திருந்தேன். அதைப்பற்றி இன்றைய தினம் அஜெண்டாவில் ஒன்றும் இல்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ள முடியாது. பர்ஸனல் க்ளாரிபிகேஷன் என்ற முறையில் வேண்டுமானால் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்.

திரு. ரா. மார்க்கபந்து: அடுத்த ஒன்று, குடியாத்தத்தில் நடைபெற்ற தடியடி பிரயோகம் சம்பந்தமாக 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது சம்பந்தமாகவும் இன்றைய அஜெண்டாவில் இடம் பெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நீங்கள் இப்போது கேட்க முடியாது, பர்ஸனல் க்ளாரிபிகேஷன் என்ற முறையில் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கோஷன் பிளாக்கில் 17-வது எண் உள்ள வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் வழக்கறிஞர் என்ற முறையில் எனது ஜூனியர் வக்கீல் துரைசாமி என்பவரும் என்னோடு இருக்கிறார். என்னுடைய மகன் சாந்தோம் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருப்பவனும் என்னோடு இருக்கிறான். இப்படி மூன்று பேருமாக இருக்கிறோம். கட்சித் தலைவர் என்ற முறையில் என்னைப் பார்ப்பதற்காக பல பகுதிகளிலிருந்து என்னுடைய வீட்டுக்கு வந்து சேருகிறார்கள். அப்படியிருக்க 11—9—1978-ம் தேதியன்று திரு. துரைமுத்துசாமி அவர்கள் என்னைப்பற்றி இந்த மன்றத்தில், எனக்கு மக்களிடம் தப்பபிப்ராயம் உண்டாகும் படியான அளவில் நாட்டு

1978 செப்டம்பர் 14] [திரு. ரா. மார்க்கபந்து]

மக்களிடம் கெட்ட எண்ணத்தை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உண்மைக்கு புறம்பான தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். ''மார்க்கபந்து பெயரிலும், துரை கோவிந்தராஜன் பெயரிலும் இருக்கின்ற வீடுகளில் வேறு நபர்கள் இருக்கிறார்கள். உடனே இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற வகையில் பேசியிருக்கிறார்கள்'' இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. வேண்டுமென்றே என் மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்று இதை சொல்லியிருக்கிறார்கள். இந்தச் செய்தி ''தினகரன்'' பத்திரிகையிலும் ''தினத்தந்தி'' பத்திரிகையிலும் கொட்டை எழுத்துக்களில் போட்டிருக்கிறார்கள். இவ்விதம் வந்திருப்பது வேண்டுமென்றே எங்களை நாட்டு மக்களிடம் கேவலப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்பட்டிருப்பதாக இருப்பதால், இதன் மீது உரிமைப் பிரச்னை என்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதே தன்னுடைய வீட்டில் துரைசாமி என்பவர் தங்கியிருக்கிறார் என்றும், அவர் ஒரு வழக்கறிஞர் என்று சொன்னார், அவர் இவருடைய உறவினரா என்பதை அவர் சொல்லவில்லை. துரைசாமி என்று தான் பெயர்ப்பலகை அங்கு இருக்கிறது. துரைசாமி என்பவர் பெயரிலுள்ள தபால்கள் எல்லாம் அங்கே தான் வருகிறது, நீதி மன்றத்திலும் இதே முகவரியில் தான் ரெஜிஸ்டரும் செய்திருக்கிறார்கள், இதன் அடிப்படையில் தான் நான் பேசினேனே தவிர வேறு முறையில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : The Hon. Member must understand the point and then raise it. திரு. துரைசாமி அவர்கள் என்னுடைய மைத்துனர், அவர் என்னுடைய ஜூனியர் வக்கீலாக இருக்கிறார். அதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் அவர் எப்படிச் சபையில் இந்தவிதமாக பேசலாம்?

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. மார்க்கபந்து அவர்களுடன் திரு. துரைசாமி என்பவரும் தங்கியிருப்பதாக அறிகிறேன் என்று தான் துரைமுத்துசாமி பேசியிருக்கிறார். நீங்களும் துரைசாமி என்பவர் உங்கள் மைத்துனர் என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள், ஆகவே இதில் உரிமை மீறல் பிரச்னை வருவது என்பதோ, திரித்துக் கூறினார் என்ற பிரச்னையோ எழவில்லை என்ற எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒருவருடைய பெயர்ப் பலகை இருந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வீட்டில்

என்னுடைய பெயர்ப் பலகை தான் இருக்கிறது. என்னைப் பார்க்க வருகின்ற மக்கள் அங்கு இருப்பார்கள். அதைப் பார்த்து விட்டு இப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன் என்னுடைய மருமகன் என்னோடு இருந்து வருகிறார். ஆகவே தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் சபையில் தந்திருக்கிறார்கள் என்னுடைய வீட்டில் என்னுடைய பெயர்ப் பலகை தான் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை சபையில் சொன்னதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : He is misleading the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : That I must decide. இது உங்களுடைய பிரச்னை அல்ல. துரை முத்துசாமிக்கும், துரை கோவிந்தராஜுக்கும் உள்ள பிரச்னை.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் துரை கோவிந்தராஜன் அவர்கள் பேசுகின்ற போது சொன்னார்கள். என்னுடைய மருமகன் என்னுடைய வீட்டிலே தங்கியிருக்கிறார்கள் என்று. வீடு அவருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் வகிக்கின்ற கொறடா பதவிக்காக. ஆகவே, மருமகன் அவர் வீட்டில் தங்கலாமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மகன், மகள் இருக்கலாமா என்றெல்லாம் கேட்டால், பின்னால் மனைவி கூட இருக்கலாமா என்ற கேள்வி வரும். அதுவல்ல பிரச்னை. திரு. துரை கோவிந்தராஜன் அவர்களோடு பால்ராஜ் என்கின்ற அவருடைய மருமகன் அந்த வீட்டிலே இருக்கலாம். இது தவறல்ல.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்.

41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாடு பூராவிலும், இந்தியா எங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரிஜன பாதுகாப்பு, விவசாயப் பொருட்களுக்கு விலை நிர்ணயம், மக்களுக்கு வேலைவாய்ப்பு போன்ற கோரிக்கைகளை வைத்து நேற்று சென்னை